1971 ஜூலை 14]

Patients under Employees State Insurance Scheme.

* 228. Q.—THIRU M. SURENDRAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether patients entitled for treatment in E.S.I. hospitals are at times sent to Government Hospitals; and

(b) if so, whether there is any proposal under the consideration of the Government to make provision for the purchase of medicines which are not available in the Government Hospitals by the patients and for their reimbursement later?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் நோயாளிகள் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும்போது, அம்மருத்துவ மனைகளில் இல்லாத மருந்துகளை தலைமை மருத்துவ அதிகாரிகளே வெளியிலிருந்து வாங்கி சிகிச்சை செய்வதற்கும், சிற்சில சமயங்களில் நோயாளிகள் அம்மருந்துகளை வெளியில் வாங்க நேரிடும்போது அச்செலவை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் தக்க ஏற்பாடுகள் முன்னரே செய்யப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் உள்ள இடங்களில் அங்கே போதுமான வசதி இல்லையென்றால், நோயாளிகள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவார்களா? குறிப்பாக, மதுரை போன்ற இடங்களில் உள்ள ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் போதுமான வசதி இல்லாத போது நோயாளிகள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

தீப்பெட்டித் தொழில்

* 229 வினா—**திரு. என். கே. பழனிசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீப்பெட்டிகள் தயார் செய்வதற்குப் பயன்படும் திக்குச்சி மெழுகு, நீலநிறத் தாள்கள் இவைகளின் பற்றாக்குறை காரணமாக தீப்பெட்டி தயாரிக்கும் கைத்தொழில் நெருக்கடி நிலையில் உள்ளதா?

(இ) ஆமெனில், இந்த நெருக்கடியைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தீப்பெட்டி செய்வதில் பயன்படும் மெல்லிய நீல நிறத்தாள், பொதுச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கிறது. "திக்குச்சி மெழுகு" வழங்குவதில்தான் சிறிது பற்றாக்குறை இருந்தது. மற்றபடி இத்தொழிலில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட விவரம்—

(1) "திக்குச்சி மெழுகு" கிடைப்பதிலுள்ள பற்றாக்குறையைப் போக்குவதற்கு வேண்டி, 500 மெட்ரிக் டன்கள் மெழுகை, இம்மாநிலத்திற்கு வழங்குமாறு இந்திய அரசை இவ்வரசு கேட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS